# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 138/2015

Prosecution Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : கமாலுதின் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of October 2024.

(Accused 1 - 5 absent. Petition u/s. 317 Crpc filed and allowed)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது போத்தனூரில்குடியிரக்கிறேன். நான் மிளகாய் வியாபாரம் செய்து வருகிறேன். எனது மகள் அசா 1க்கும் 1ம் எதிரிக்கும் 07.10.2012 அன்று பாலக்காடு மெயின்ரோடு, கோவையில் உள்ள ஆயிஷா மஹாலில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்காக எனது மகளுக்கு 157 பவுன் தங்க நகை சீதனமாக கொடுத்தேன். மேலும் இரண்டு கார்கள் சீதமனமாக கொடுத்தேன். 1ம் எதிரிக்கு மொத்தம் 12 பவுன் நகை சீதனமாக கொடுத்தோம். முதலில் திருமணத்திற்காக Volks wagen vento car ரூபாய் 10 லட்சத்திற்கு வாங்கிக்கொடுத்தேன். ஆனால் 1ம் எதிரி மேற்படி கார் பிடிக்கவில்லை என்று கூறியதால் Volks wagen vento car ரூபாய் 12 லட்சத்திற்கு வாங்கிக்கொடுத்தேன். திருமண்ததிற்கு பின்னிட்டு 1ம் எதிரியும் அசா 1ம் அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார்கள்.

2. எனது மகளுக்கு திருமணத்தின்போது அணிவித்த 157 பவுன் நகை குறைவாக உள்ளதாக 1வது எதிரியின் பெற்றோர் மற்றும் சகோதரி கூறினார்கள். அவர்கள் மேற்படி நகைகளை பொள்ளாச்சி குபேரன் ஜுல்லரி சென்று எடைபோட்டு பார்த்தார்கள். எடை சொன்னபடி சரியாக இருந்தது.

3. கோவை, வேலாண்டிபாளையத்தை சேர்ந்த சகர்பானு என்பவர் மூலமாகதான் மேற்படி திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அசா 1ம் 1ம் எதிரியும் கொடைக்கானலுக்கு தேனிலவுக்கு சென்றிருந்த சமயத்தில் 1ம் எதிரி குடும்பத்தார்

நகை குறைவாக உள்ளுது என்றும் தேனிலவுக்கு செல்லவேண்டாம் என்று திரும்பி வரச்சொல்லிவிட்டார்கள். பின்னர் எனது மகள் அசா 1ன் கைபேசியை பிடுங்கி வைத்துக்கொண்டார்கள். இதனால் எங்கள் குடும்பத்திறகும் என் மகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருந்தது. அவர்கள் வீட்டில் பணிபுரியும் பெண்ணில் மொபைல்போனில் இருந்து எனது மகள் எங்களுடன் பேசுவார். அசா 1ஐ வெளியே அழைத்துசெல்லாமலும் சரியாக உடைகள் மற்றும் உணவு கொடுக்காமலும் நடத்தியுள்ளார்கள்.

4. ஒருநாள் என் மகள் ரசம் மற்றும் சாதம் சமைத்துள்ளார். தங்களை கேட்காமல் எப்படி சமைக்கலாம் என்று கேட்டு ரசத்தை என் மகள் மீது 1ம் எதிரியின் சகோதரி ஊற்றியுள்ளார். திருமணத்திற்கு பின்பு ஒரு வருடம் கழித்து என் மகள் கருவுற்றிருந்தாள். எங்கள் குடும்பத்தார் பொள்ளாச்சி ஜமாத்தில் முறையிட்டு அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் எனது மகளை எங்கள் வீட்டுக்கு நாங்கள் அழைத்து வந்தோம். எதிரி வீட்டார் எனது மகளை வந்து பார்க்கவில்லை.

5. மேற்படி இரண்டு ஜமாத்துகளும் பைசல் பேசினார்கள். எதிரி குடும்பத்தார் பைசலுக்கு ஒத்துவரவில்லை. என் மகளுக்கு பிரசவ செலவை நான்தான் பார்த்தேன். என் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை பார்க்க ஜமாத்தில் இருந்து கூறியும் எதிரி குடும்பத்தார் யாரும் வந்து பார்க்கவில்லை. பிறகு 3 மாதங்கள் கழித்து எதிரி குடும்பத்தார் அசா 1ஐ தங்கள் குடும்பதிற்கு அழைத்து சென்றார்கள்.

6. பிறகு தொடர்ச்சியாக என் மகளை எதிரி குடும்பத்தார் மிகுந்த சித்திரவதைக்கு ஆளாக்கினார்கள். ஒருநாள் என்மகள் அவர்கள் வீட்டில் இருந்த போன் மூலமாக தொடர்பு கொண்டு தொட்டிலில் கிடத்தியிருந்த தனது குழந்தையை தொட்டிலை ஆட்டும்போது சுவற்றில் அடிக்க எதிரி குடும்பத்தார் முயற்சி செய்ததாகவும் அதை தான் தடுத்துவிட்டதாகவும் அலைபேசியில் கூறினார். இது பற்றி பொள்ளாச்சி ஜமாத்தில் நாங்கள் முறையிட்டோம். ஜமாத்தில் இருந்து எதிரி குடும்பத்தாரை அழைத்து பேசினார்கள் அதற்கு எதிரி குடும்பத்தார் எனது மகள் இறந்துவிட்டதாக கூறுமாறு சொல்லியுள்ளார்கள்.

7. பிறகு பொள்ளாச்சி ஜமாத்தில் எனது பெண்ணை மீட்க முயற்சி எடுத்தார்கள் ஆனால் அசா 1ஐ எதிரி குடும்பத்தார் எங்கு வைத்துள்ளார்கள் என்று அவர்களுக்கு தெரியவில்லை. எனவே ஜமாத்தில் இருந்து எங்களை அழைத்து சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். எனவே நாங்கள் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் எதிரிகள் வீட்டிற்கு சென்று முதலில் மைக்கில் எனது மகளை வெளியே அனுப்புமாறு கூறினார்கள். ஆனால் எதிரிகள் வீட்டின் கதவை திறக்கவில்லை. எனவே போலீசார் கதவை தாங்களாகவே திறந்தார்கள். உள்ளே இருந்த எனது மகளை மீட்டு என்னிடம் கொடுத்தார்கள். அச்சமயத்தில் எனது மகள் அணிந்திருந்த நைட்டியில் வலது கை மற்றும் இடது கை கிழிந்திருந்தது. அதன்பிறகு என் மகளை என் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன்.

8. ஜமாத் மூலமாக பைசல் நடந்துகொண்டிருந்த சமயத்தில் 1ம் எதிரி என் மகளுக்கு தொடர்ந்து 3 வெள்ளிக்கிழமைகளில் தலாக் அறிவித்தார். கோவை ஜமாத்தில் 1ம் எதிரி தலாக் கொடுத்துவிட்டதால் இனி பைசலில் பயன் இல்லை என்று கூறி எங்கள் பெண்ணுக்கு கொடுத்த பொருட்களை வாங்கிக்கொள்ளுமாறு கூறினார்கள். நகைகளை தவிர பிற பொருட்களான கட்டில், பீரோ ஆகியவற்றை எதிரி குடும்பதார் திருப்பி கொடுத்துவிட்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

1-5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. சம்பவ சமயத்தில் நான் கோவையில் குடியிருந்தேன். அச்சமயம் அசா 1 மற்றும் எதிரிகள் பொள்ளாச்சியில் குடியிருந்தார்கள்.அசா 1 மற்றும் 1ம் எதிரிக்கு இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. எதிரிகள் கேட்டதற்கிணங்க வரதட்சனையாக 157 பவுன் தங்க நகை 1ம் எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். எதிரிகள் வரதட்சனை கேட்டதாக போலீசாரிடம் நான கூறவில்லை என்றாலும் தற்போதுதான் அவ்வாறு கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

2. போலீசார் விசாரணையில் எதிரிகள் சீதனம்கேட்டு நான் மேற்படி பொருட்களை கொடுத்தாக கூறியுள்ளேன். நானாக சீதனமாக கொடுத்தேன் என்று கூறவில்லை. போலீசார் விசாரணையில் 157 பவுன் தங்க நகை சீதனமாக கொடுத்தாக கூறியுள்ளேன். போலீசா விசாரணையில் 1ம் எதிரிக்கு நான் மொத்தம் 12 பவுன் தங்க நகை கொடுத்தது பற்றி கூறவில்லை.

3. எதிரிக்கு சீதனமாக கொடுத்த காரை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். மேற்படி காரின் ஆர்.சி.புத்தகம் அசா 1ன் பெயரில் உள்ளது. எதிரிகள் சீதனமாக கார் கேட்கவில்லை என்றாலும் நான்தான் என சுயவிருப்பதில்என் மகளுக்கு கார் வாங்கிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் கேட்டதால்தான் கார்

வாங்கிக்கொடுத்தேன். எதிரிகள் நான் கொடுத்த 157 பவுன் தங்க நகை குறைவாக உள்ளதாக கூறினார்கள் என்று போலீசாரிடம் கூறியுள்ளேன்அவ்வாறு நான் எதுவும்கூறவில்லை என்றால் சரியல்ல.

4. பொள்ளாச்சி குபேரன் ஜுவல்லர்ஸ்சில் எதிரிகள் நான் கொடுத்த நகைகளை எடை போட்டு பார்த்தாக போலிசாரிடம் கூறியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. கோவையை சேர்ந்த சகர்பானு என்பவர் மூலம்தான் திருமணம் நிச்சயிக்கப்பட்டது என்று போலீசாரிடம் கூறியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. திருமண சமயத்தில் நான் கொடுத்த நகைகள் மற்றும் சீதன பொருட்கள் பற்றி மேற்படி சகர்பானுவுக்கு தெரியும்.

5. எதிரிகள் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை என்றாலும் வழக்கிற்காக எதிரிகள் என்னிடம் வரதட்சனை கேட்டதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் மகளுக்கு 157 பவுன் தங்க நகைகள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கேட்டதின்பேரில் என் மகளுக்கு 157 பவுன் நகைகள் அணிவித்தேன். மேற்படி 157 பவுன் தங்க நகைகள் நான் என் மகளுக்கு சீதனமாக கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் மேற்படி நகைகளின் பட்டியலை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி விபரத்தை போலீசர் விசாரணையில் கூறியுள்ளேனா என்று நினைவில்லை. அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல.

6. கோவை நீதிமன்றத்தில் இது குறித்து ஒரு DVA வழக்கு நடைபெற்று முடிந்துவிட்டது. அந்த நீதிமன்றத்தில் மேற்படி ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ரசீதுகளின் நகல்களை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. மேற்படி நகைகளை என் மகள் அணிந்திருந்த புகைப்படங்களை கோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். போலிசாரிடம் அதன் இன்னொரு நகல்களை கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆதாரமும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் தற்போது நினைவில்லை.

7. என் மகளுக்கு நான் உண்மையில் மேற்படி நகைகளை கொடுத்திருந்தால் உரிய ஆவங்களை கொடுத்திருப்பேன் என்றாலும் உண்மையில் நான் நகைகளை வாங்கியிருந்தால் அதற்கான ஆதாரத்தை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. முதலில் எதிரி குடும்பத்தார் எனது மகளை பெண் கேட்டு நான் கொடுக்க மறுத்துவிட்டேன். அதன்பிறகு வேறு ஒரு வரன்பேசி நிச்சயம் செய்யப்பட்டு

திருமணத்திற்கு முன்பாக அது நின்றுவிட்டது. இது தெரிந்த பிறகு எதிரி குடும்பத்தார் மீண்டும் எனது மகளை பெண் கேட்டார்கள். அதன்பிறகு 1ம் எதிரிக்கும் அசா 1க்கும் திருமணம் செய்து வைத்தோம். மேற்படி காழ்புணர்ச்சியை மனதில் வைத்துக் கொண்டு குற்ற சம்பவத்தை எதிரிகள் புரிந்துள்ளார்கள். மேற்படி விபரங்களை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரி வீட்டில்தான் என் மகள் வசித்தார். அசா 1 கூறிதான் எதிரிகள் வீட்டில் நடந்த சம்பவம் குறித்து எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி சம்பவங்கள் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் எதிரியும் அசா 1ம் மொத்தமாக சுமார் 3 மாதங்கள்தான் ஒன்றாக வாழ்ந்துள்ளார்கள். பொள்ளாச்சி ஜமாத்தில் கூறிய பிறகு 1ம் எதிரி வீட்டிற்கு எனது மகளை மீட்க சென்றோம். என் மகளை பார்க்க எதிரி வீட்டார் அனுமதிக்கவில்லை. ஆனால் எனது மகளை பார்க்க நாங்கள் செல்வோம்.

10. 1ம் எதிரியின் அக்கா மற்றும் அவரது கணவரான 4 மற்றும் 5 ம் எதிரிகள் மகாலிங்கபுரத்தில் குடியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தினமும் 1ம் எதிரி வீட்டிற்கு வந்துவிடுவார்கள். அவ்வாறு அடிக்கடி அவர்கள் வரமாட்டார்கள் என்றாலும் எப்பொழுதாவதுதான் வருவார்கள் என்றாலும் சரியல்ல. என் மகள் குடியிருந்த 1ம் எதிரி வீட்டை சுற்றி நிறைய குடியிருப்புகள் இருந்தது என்றால் சரிதான். எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் இடையே இருந்த பிரச்சனை குறித்து அவர்களது எதிர் வீட்டுக்காரர்களுக்கு தெரியும்.

11. பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் எனது மகளை மீட்டபோது மேற்படி எதிர் வீட்டுக்காரர் வேடிக்கை பார்த்தார், அவர் பெயர் தெரியவில்லை. போலீசார் அங்கு வந்தபோது பக்கத்து வீட்டுக்காரர்களும் வேடிக்கை பார்த்தனர் என்றால் சரிதான். என் மகளை மீட்டுக்கொடுக்குமாறு தனியாக எந்த புகாரும் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. போலீசாரிடம் என் மகளை மீட்டுத்தறுமாறு நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியாக நினைவில்லை. பதட்டத்தில் அச்சமயம் என்ன நடந்தது என்று சரியாக நினைவில்லை.

12. எதிரிகள் வீட்டில் பணிபுரிந்த பெண்ணின் பெயர் எனக்கு நினைவில்லை. மேற்படி பணி பெண்ணின் அலைபேசியில் இருந்து என் மகள்அழைப்பார் என்ற விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன். நகைகள் குறைவாக இருப்பதாகவும்,

எனவே கொடைக்கானலில் இருந்து தேனிலவில் இருந்து திரும்பி வருமாறு எதிரிகள் கூறியதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல.

13. எதிரி வீட்டார் என் மகளுக்கு உணவு மற்றும் உடை கொடுக்கவில்லை என்ற விபரம் நேரடியாக எனக்கு தெரியாது ஆனால என் மகளை பார்த்தபோது அவரது தோற்றம் மற்றும் உடல்நிலையில் இருந்து மேற்படி சங்கதி எனக்கு தெரிய வந்தது. அவ்வறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிய்லல. 4 வது எதிரி எனது மகளின் குழந்தையை தொட்டிலில் ஆட்டும்போது சுவற்றில் இடிக்க முயற்சி செய்ததை நான் போலீசாரிடம் கூறியுள்ளேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றால் சரியல்ல. என் மகள் மீது 4 வது எதிரி ரசம் ஊற்றிய விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன். அவ்வாறு நான் கூறவில்லை என்றால் சரியல்ல.

14. முதலில் எதிரி வீட்டார் பொள்ளாச்சி ஜமாத்தில் முறையிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரை பொள்ளாச்சி ஜமாத் கோவையில் உள்ள ஜமாத்திற்கு அனுப்பி கோவை ஜமாத் எங்களை அழைத்து விசாரித்தது. மேற்படி விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன். கோவை ஜமாத்தின் முத்தவல்லி(தலைவர்), நிர்வாகிகள் என் மகளுக்கும் எதிரிகளுக்கும் பைசல் பேசினார்கள் என்றால் சரிதான். எதிரிகள் என் மகள் இறந்துவிட்டதாக எங்களிடம் கூறுமாறு ஜமாத் நிர்வாகத்திடம் சொன்னார்கள் என்ற விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன்.

15. கோவை அல்அமீன்காலனி ஜமாத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. அவர்கள் நடத்திய விசாரணையில் நான் கலந்துகொண்டேன். என் மகள் சித்திரவதைக்கு உள்ளானார் என்று கூறியுள்ள நிலையில் ஆரம்பத்தில் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் என் மகளுக்கும் 1ம் எதிரிக்கும் ஆண் குழந்தை இருந்ததால் அவர்கள் சமாதானமாகி சேர்ந்து வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் கொடுக்கவில்லை.

16. உண்மையில் என் மகளுக்கு எந்த சித்திரவதையும் நடக்கவில்லை என்பதால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகளுக்கு குழந்தை பிறந்தபோது எதிரிகள் குழந்தையை வந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் என் மகளை காண்பிக்காததால் என் மகள் இருக்கிறாரா இல்லையா என்று தெரியாத நிலையிலும் ஜமாத்திலும் எனது மகளை கண்டுபிடிக்க இயலவில்லை என்று கூறியதாலும் போலீசார் மூலமாக எதிரிகள் வீட்டுக்கு சென்றோம். எதிரிகள்

அவ்வாறு எந்த செயலும் புரியவில்லை என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணை செய்தபோது திருமணத்தின்போது எனது மகளுக்கு சீதனமாக கொடுத்த கட்டில், வார்டிரோப், துணிகள் உட்பட அனைத்தையும் எனது சம்மந்தார் ஹனிபா ஒப்படைத்ததை 08.09.2014 அன்று பெற்றுக்கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வார்டிரோபை கொடுக்க முடியாது பொருத்ததான் முடியும்.

17. என் மகளை போலீசார் மீட்டபோது அவர் அணிந்திருந்த இரண்டு கைகளும் கிழிந்த விபரத்தை போலீசாரிடம் கூறியுள்ளேன் போலீசாரும் அதை நேரடியாக பார்த்தனர். மேற்படி சம்பவம் நடந்த தேதி சரியாக நினைவில்லை 2014 ம் வருடம் நடந்தது. 3 வெள்ளிக்கிழமைகளில் 1ம் எதிரி தபால் மூலம் அனுப்பிய தலாக் நோட்டிஸ்களை அசா 1 பெற்றுக்கொண்டார். வெள்ளிக்கிழமை எங்கள் இஸ்லாம் மதத்தில் புனித நாள் என்பதால் அந்த நாளில் தலாக் நோட்டிஸ் என் மகளுக்கு கிடைக்குமாறு செய்து எதிரிகள் எங்களை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்கள். அவ்வாறு எதிரிகள் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18. மேற்படி 3 தலாக் நோட்டிஸ்களுக்கு மறுப்பு கடிதம் எதுவும் அசா 1 அனுப்பவில்லை அதற்கு காரணம் ஜமாத் நிர்வாகம் பைசல் பேசிக்கொண்டிருந்ததால் அதற்கு கட்டுப்பட்டு அவ்வாறு அனுப்பவில்லை. சரியத் சட்டப்படி அதற்கு அனுமதியில்லை. மேற்படி விபரத்தை போலீசார் கேட்காததால போலீசாரிடம் கூறவில்லை. தலாக் நோட்டிஸ்களில் கூறப்பட்டிருந்த காரணங்கள் உண்மையாக இருந்ததால்தான் அசா 1 ஆட்சேபனை கடிதம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

19. கோவை கூடுதல் குடும்ப நல நீதிமன்றத்தில் அசல் வழககு எண். 18/2015 விவாகரத்து கோரி என் மகள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதற்கு காரணம் 1ம் எதிரி தலாக் கொடுத்தபிறகு சரியத் சட்டப்படி வேறு திருமணம் செய்துகொண்டார். அதன்பிறகு சட்டரீதியாக என் மகள் மேற்படி வழக்கை தொடுத்தார். மேற்சொன்ன சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் மேற்சொன்ன சங்கதிகளை கூறவில்லை என்றால் சரிதான்.

20. அச்சமயம் 1ம் எதிரி மீண்டும் திருமணம் செய்துகொணட விபரம் எங்களுக்கு தெரியாது. மேற்படி வழக்கில் 1ம் எதிரி தான் அனுப்பிய 3 தலாக் நோட்டிஸ்களை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விவாகரத்து

உத்தரவு வழங்கப்பட்டது ஆனால் அசா 1ம் 1ம் எதிரியும் சேர்ந்து ஒரு குறிப்பை தாக்கல்செய்து அதன்பேரில் விவாகரத்து வழங்கப்பட்டதா என்று நினைவில்லை. என் மகள் விவாகரத்து வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என்று மேற்படி வழக்கில் கூறியுள்ளார். அனைத்து நகைகளையும் திரும்ப பெற்றுக் கொண்டதால்தான் விவாகரத்து கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று அசா 1 கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

21. அச்சமயம் DVA வழக்கில் நகைகளை திரும்ப கோரி மேற்படி மனு நிலுவையில் இருந்ததால் அசா 1 விவாகரத்திற்கு ஆட்சேபனை இல்லை என்று கூறினார். அச்சமயம் அவ்வாறு DVA வழக்கு நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. விவாகரத்து வழங்கப்பட்ட பிறகு அசா 1க்கு மறுமணம் நாங்கள் செய்து வைத்தோம். அதில் அசா 1க்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. தற்போது அசா 1 மறுமணம் செய்த கணவருடன் வாழ்ந்து வருகிறார்.

22. 1ம் எதிரிக்கும் அசா 1க்கும் பிறந்த ஆண் குழந்தைக்கு முழுமையான செலவுகளை நான்தான் செய்து வருகிறேன். மேற்படி குழந்தையை 1ம் எதிரி பார்ப்பதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை என்றாலும் நாங்களே வலுக்கட்டாயமாக ஆண் குழந்தையை வளர்த்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. 1ம் எதிரிதான் இதுவரை குழந்தையை பார்க்கவில்லை. 1ம் எதிரி தனது குழந்தையை பார்ப்பதற்கு எப்போதும் தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

23. இந்த வழக்கில் அசா 1காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். எதிரிகள் புகாரில் கூறியவாறு எந்த குற்றமும் புரியவில்லை என்றாலும் அசா 1க்காக நான் பொய் சாட்சியமளிகிறேன் என்றாலும் சரியல்ல. நான் சீதனமாக கொடுத்த நகைகளை திரும்ப பெற்றுகொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.